செய்தி வெளியீடு எண்: 1034 நாள்: 26.11.2008

## செய்தி வெளியீடு

### அரிசி ஆலைகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு

அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல், அரிசி வியாபாரிகள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் 25.11.2008 அன்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் நடத்திய கூட்டத்தில் பங்கேற்று முக்கிய உணவுப் பொருளான அரிசியை தயார் செய்து பொது மக்களுக்கு வழங்கும் அத்தியாவசிய சேவையை செய்து வரும் அரிசி ஆலைகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று கோரிக்கை அளித்ததுடன், வெளி மார்க்கெட்டில் அரிசியின் விலையை ரூ.3.00 வரை குறைப்பதாகவும் உறுதியளித்து இன்று செய்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரிசி ஆலை உரிமையாளர்களின் கோரிக்கையினை ஏற்று, அனைத்து அரிசி ஆலைகளுக்கும் மின் வெட்டிலிருந்து விலக்களிக்க ஆணையிட்டார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9